(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 104.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2024 ஜனவரி 12, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

3360/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின், மாதம்பாகம பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அத்துரல வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்டிருந்த அத்துரல கனிஷ்ட வித்தியாலயத்தை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தை அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட காணியின் முதல் உரிமையாளரின் பெயர், நில அளவைப் படத்தின் இலக்கம் மற்றும் பரப்பளவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வித்தியாலயத்தை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த காணியின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்படி வித்தியாலயத்தை அமைப்பதற்காக குறித்த காணியை கையகப்படுத்திய ஆண்டு யாதென்பதையும்;

(v) இன்றளவில் மேற்படி காணியின் உரிமையைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

3366/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக மரணித்தவர்கள் சார்பில் அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இத்தாக்குதல் காரணமாக பெற்றோரை இழந்த பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அப்பிள்ளைகளைப் பராமரிப்பதற்காக அவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவொன்று செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) இத்தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச அனுசரணையில் வெளிநாட்டுச் சிகிச்சைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

3425/2023

கௌரவ இம்தியாஸ் பாகீர் மாகார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் சாய்சாலைக்கு (கிளினிக்) நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளிகளுக்கு நிர்ணயிக்கப்படுகின்ற புற்றுநோய் ஒழிப்பு மருந்துகள் மேற்படி வைத்தியசாலையில் இல்லாமை காரணமாக நோயாளிகளுக்கு அவை வழங்கப்படுவதில்லை என்பதையும்;

(ii) மிகவும் அதிகமான விலையைக் கொண்ட மேற்படி மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு பொருளாதார பலம் இல்லாத இந்நோயாளிகள், புற்றுநோய் தீவிரமடைந்து உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சாய்சாலைக்கு நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் தற்போது பற்றாக்குறையாகவுள்ள மருந்து வகைகள் யாவை என்பதையும்;

(iii) மருந்துப் பற்றாக்குறையைத் தவிர்த்துக் கொண்டு, அத்தியாவசியமான புற்றுநோய் ஒழிப்பு மருந்துகளை, மேற்படி வைத்தியசாலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iv) அவ்வேலைத்திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

3483/2023

கௌரவ வேலு குமார்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தான தோட்டக் காணிகளில் பாற்பண்ணைகளை நிறுவுவதற்கு 2021.09.06 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஆமெனில், இதற்கென “கலபொட” மற்றும் “மவுண்ட் ஜீன்” ஆகிய ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் காணிகளின் அளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இக் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கம்பெனியினதும் பெயர், அக்கம்பெனிகளின் பணிபாளர்களின் பெயர்கள், அவர்களின் தேசியம் (உள்நாட்டவரா/வெளிநாட்டவரா) என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கம்பெனியினால் செலுத்தப்படும் முற்பணத் தொகை மற்றும் ஒரு ஏக்கருக்கான வருடாந்த குத்தகைத் தொகை என்பன வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தோட்டங்களில் பாற்பண்ணைக்காக ஒதுக்கப்படும் நிலப்பரப்பில் அமைந்துள்ள லயன் வீடுகளினதும் வணக்கஸ்தலங்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்,

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தோட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள அரச பாற்பண்ணைகளிடம் போதியளவு காணிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி தோட்டக் காணிகளை பாற்பண்ணைகளுக்காக வழங்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) அப் பாற்பண்ணைகளை நிறுவுவதற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

3515/2023

கௌரவ அசங்க நவரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இன்றளவில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதிக்கான பதவிகளில் இன்றளவில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iii) 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலையிலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டுள்ள வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை;

(iv) மேற்படி காலப்பகுதியில் ஓய்வு பெற்றுள்ள வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

3570/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அவர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

3645/2023

கௌரவ வடிவேல் சுரேஷ்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பதுளை டிப்போவினால் பதுளை நகரிலிருந்து தெமோதர ஊடாக வேவெல்ஹின்ன வரை; மடுல்சீமை - குருவிகொல்ல ஊடாக கொக்காகல வரை; லுணுகல ஊடாக பல்லேகிருவ வரை; தெமோதர ஊடாக ஓதும்ப வரை; ரொக்கதென்ன வரை மற்றும் ரொசட் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பஸ் வண்டிகள் உட்பட ஏனைய துணை வீதிகள் பலவற்றில் பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக தோட்டப்புற பிரதேசங்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக பதுளை நகருக்குச் செல்லும் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(ii) அச்சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

3753/2023

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகிய ஒவ்வொரு நிறுவனமும் இலங்கையில் மருந்து வழங்குநர்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையானது, 60 நாட்களுக்கு மேற்பட்ட, 90 நாட்களுக்கு மேற்பட்ட, 120 நாட்களுக்கு மேற்பட்ட, 180 நாட்களுக்கு மேற்பட்ட மற்றும் 360 நாட்களுக்கு மேற்பட்ட என்ற கால வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

(ii) இலங்கையில் மருந்து உற்பத்தியாளர்களுக்குச் செலுத்தவேண்டியுள்ள நிலுவைத் தொகையானது, 60 நாட்களுக்கு மேற்பட்ட, 90 நாட்களுக்கு மேற்பட்ட, 120 நாட்களுக்கு மேற்பட்ட மற்றும் 180 நாட்களுக்கு மேற்பட்ட என்ற கால வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்திய கடனுதவிக் கட்டளையின் மீது மருந்துகளை வழங்கிய வழங்குநர் களுக்குச் செலுத்தவேண்டியுள்ள நிலுவைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரை சுகாதார அமைச்சு, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஆகியன மருந்து வழங்குநர்கள் மற்றும் மருந்து உற்பத்தியாளர்களுக்குச் செலுத்தியுள்ள தொகை ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

3758/2023

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைச் சலுகையுடனான வாகன அனுமதிப் பத்திரங்களுக்குரிய தீர்வைச் சலுகையின் நிதி ரீதியான பெறுமதி;

ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

3775/2023

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2022ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் —

(i) ஊழியர் சேமலாப நிதியம் அதன் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டியுள்ள மொத்த நிதித் தொகை;

(ii) நிதியத்தின் மொத்த வைப்புகளின் பெறுமதி;

(iii) அதன் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டிய மொத்த நிதித் தொகையானது நிதியத்தின் மொத்த வைப்புக்களின் பெறுமதியின் சதவீதமாக;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் —

(i) ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை;

(ii) செயற்படுநிலையிலுள்ள பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்குறிப்பிட்ட செயற்படுநிலையிலுள்ள பங்களிப்பாளர்களினுடைய கணக்கு மீதிகளின் மொத்த பெறுமதி;

(iv) அதன் நிதியை முதலீடு செய்வதன் மூலம் ஈட்டியுள்ள மொத்த நிதியானது செயற்படுநிலையிலுள்ள பங்களிப்பாளர்களின் கணக்குகளில் உள்ள மீதிகளின் மொத்த பெறுமதியின் சதவீதமாக;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம் மற்றும் 3 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேடகுழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2024 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யபடுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— இலங்கையில் முன்மொழியப்பட்ட 'வணிக தொழில்முயற்சிகளுக்கான தயார்நிலை (B-READY) சுட்டெண்' பற்றிய தயார்படுத்தல் தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கையில் முன்மொழியப்பட்ட 'வணிக தொழில்முயற்சி களுக்கான தயார்நிலை (B-READY) சுட்டெண்' பற்றிய தயார்படுத்தல் தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2023 நவம்பர் 16 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேடகுழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2024 ஏப்ரல் 22 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யபடுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 22/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் வழங்கும் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள் காரணமாக நகர்ப்புற மற்றும் கிராமிய சமூகம் பெரும் நிலைகுலைவுக்கு உட்பட்டுள்ளமையினாலும், நுண்நிதி மற்றும் குத்தகை கடன் தொடர்பில் குறிப்பிட்ட நிறுவனங்களின் தூண்டுதல் காரணமாக கடன் பெற்றுக்கொண்டுள்ள ஏராளமான குடும்பங்கள் தற்போது கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளமையினாலும், அந்த நிறுவனங்களின் வட்டி வீதங்கள் பல்வேறு அளவுகளில் காணப்படுவதனாலும், குத்தகை கடன் தவணைகளைச் செலுத்தத் தவறும் நபர்கள் குறிப்பிட்ட நிறுவனங்களின் பல்வேறுபட்ட அழுத்தங்கள் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாவதனாலும், நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் நிறுவனங் களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 10/2023

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 46/2023

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட தேயிலைக் கைத்தொழில் முறைமைக்குப் பதிலாக தேயிலை சிறு தோட்ட முறைமையொன்றினை ஏற்படுத்துதல்,— இலங்கையின் தேயிலைப் பயிர்ச் செய்கையானது பெருந்தோட்டங்கள் மற்றும் தேயிலை சிறு தோட்டங்கள் ஆகிய இருவழி முறைகளைக் கொண்டமைந்திருப்பதனாலும், இதில் பெருந்தோட்ட முறைமையானது ஏற்கனவே வீழ்ச்சியடைந்து வருவதனாலும், பெருந்தோட்ட முறைமையில் மேற்கொள்ளப்படும் தேயிலை பயிர்ச் செய்கையினை சிறு தோட்ட முறைமையாக மாற்றியமைத்து குறித்த தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களை, சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவதன் மூலம் அவற்றினை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 24/2023

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார,— இலங்கையில் ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்கப்படுதல்,— ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாக பணியாற்றுவதன் மூலம் உருவாகும் தனிப்பட்ட தொடர்புகளால் சில பிள்ளைகளுக்கு சிற்சில சந்தர்ப்பங்களில் அநீதிகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்தின் பல்வேறு படிநிலைகளைச் சேர்ந்த பிள்ளைகளுடன் பணியாற்றுவதன் மூலம் அவர்களின் மனநிலையை புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இழக்கப்படுவதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன கல்வி முறையொன்றைப் பேணிச் செல்வதில் இடையூறுகள் ஏற்படலாமென்பதாலும், சமூகத்திலுள்ள உப கலாசாரங்களை புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் நழுவிச் செல்வதாலும், பல்வேறான பிரதேச மொழிகள் மற்றும் கலாசாரங்களிலிருந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளதாலும், கல்வியை வழங்குதல் மற்றும் நற் சமூக பிரஜைகளை உருவாக்குதல் எனும் ஒரே நோக்கம் நிறைவேறும் கல்வி முறையொன்றை உருவாக்குவதற்காக அனைத்து ஆசிரியர்களுக்கும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடமாற்றம் வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 23/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடல்,— பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி வருடாந்தம் பெற்றோர்களிடமிருந்து தொடர்ச்சியாக அறவிடப்படுவதாலும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக சில பெற்றோர்களுக்கு மேற்படி நிதியினை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதால் அப் பெற்றோர்களின் பிள்ளைகள் வகுப்பறையில் அசௌகரியங்களுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புள்ளதாலும், பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினை எவ்வாறு திரட்ட வேண்டும் என்பது தொடர்பாகவும், மேற்படி நிதி தொடர்பான வரவு செலவு அறிக்கைகளை காட்சிப்படுத்த வேண்டிய விதம் தொடர்பாகவும், மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் தொடர்பாகவும் பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரரிக்கின்றது.

6.

பா. 11/2023

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 12/2023

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 13/2023

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 14/2023

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 15/2023

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 16/2023

கௌரவ புத்திக பத்திரண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 17/2023

கௌரவ புத்திக பத்திரண,—பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,—பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 18/2023

கௌரவ புத்திக பத்திரண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா.25/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளுதல்,— கடந்த காலத்தில் இலங்கையின் அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் அலுவலக உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மர தளபாடங்கள் மிக நீண்டகாலம் உபயோகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அந்த நிறுவனங்கள் பயன்படுத்தும் அலுவலக உபகரணங்கள் ஒட்டுப்பலகை மற்றும் ஏனைய செயற்கை தகடு வகைகள்கொண்டு தயாரிக்கப்படுவதால் அவை மிகக் குறுகிய காலத்தில் அழிவடைவதாலும், தற்போதைய இந்த அலுவலக உபகரணங்களைத் தயாரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் வெளிநாடுகளுக்கு அதிகளவில் பணம் சென்றடைவதாலும், இத்தகைய பொருட்கள் எமது சூழல் தொகுதிக்கு வெளியிடப்படுவதால் பாரிய தாக்கம் ஏற்படுவதாலும், அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் பொறுப்பு வாய்ந்த பிற நிறுவனங்களிலிருந்து அரச நிறுவனங்களுக்காக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 31/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாரம்பரிய உள்நாட்டு மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகளை மீண்டும் ஊக்குவித்தல்,— எமது நாட்டின் பாரம்பரிய மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகள் தற்போது பற்றாக்குறையாக இருப்பதால் வெளிநாடுகளில் இருந்து விதைகளை இறக்குமதி செய்வதற்கு பெருந்தொகையான பணம் செலவாகுவதாலும், அவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற விதைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சலில் இருந்து பெறப்படும் விதைகள் மீண்டும் முளைப்பதற்கான திறனை கொண்டிராத காரணத்தாலும், பாரம்பரிய உள்நாட்டு விதைகளிலிருந்து கிடைக்கும் விளைச்சல்கள் பூச்சிபீடைகளினால் ஏற்படும் பாதிப்பினை எதிர்கொள்ளும் சிறப்புத் திறனைக் கொண்டிருப்பதாலும், தற்போது இலங்கையில் அருகி வரும் பாரம்பரிய உள்நாட்டு மரக்கறி மற்றும் பழ வகைகளின் விதைகளை மீண்டும் ஊக்குவிப்பதற்கு ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா.32/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— தொழில்வாண்மையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும்பொருட்டு தொழிற்பயிற்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் ஆட்களிடையே நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெற்றவர்களும் பிறப்பாற்றல் கொண்டு அத்தொழில்களில் ஈடுபடுபவர்களும் இருப்பதாலும், மேசன், மரவேலை, மோட்டார் பொறிவினைஞர், காய்ச்சியிணைத்தல், வண்ணந்தீட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களைப் பதிவு செய்வதற்கான ஒரு நிறுவனம் இல்லாமையால் ஒரே ஆள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதாலும், தொழில்வாண்மையாளர் ஒருவர் திடீர் விபத்தொன்றைச் சந்தித்துள்ள வேளையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதை எளிமையாக்குவதற்காக அந்த ஆளின் குருதி வகை பற்றிய தகவல்கள் மற்றும் சேவை பெறுநருக்கு தொழில்வாண்மையாளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் தகவல்கள் அடங்கிய தொழில் அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளதாலும், தொழில்வாண்மையாளர்களைப் பதிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டையொன்றை வழங்குவதற்காக தொழில்பயிற்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுடன் இணைந்ததான நிறுவனம் ஒன்றைத் தாபிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா.33/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்குதல்,— அரச சேவையில் இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஓர் இடத்தில் ஐந்தாண்டுகளுக்கு மேல் சேவையாற்றுகின்ற காரணத்தினால் அவர்கள் பெறக்கூடிய அனுபவம் மற்றும் சிறப்புத் தேர்ச்சி பற்றிய அறிவு குறைவடைவதாலும், அதிருப்தி மற்றும் மன அழுத்தம் குறைந்து உற்சாகமாகவும், ஆர்வமாகவும் புத்துணர்வுடனும் கடமையாற்றுவதற்கான வாய்ப்புகளை இழக்கின்றதாலும், ஏற்படக்கூடிய சமூக இடைத் தொடர்புகள் மூலம் முறைகேடுகள், ஊழல் மற்றும் மோசடிகளுக்கு தூண்டப்படக்கூடும் என்பதாலும், அரசியல் மற்றும் சமூக தொடர்புகள் காரணமாக சுயாதீன சேவையினைப் பேணுவதில் இடையூறுகள் ஏற்படக்கூடுமென்பதாலும், பிராந்திய நிருவாகத்தின் பல்வேறு அனுபவங்கள் அதிகரிக்கும் சாதகமான தாக்கம் குறைவடையுமென்பதாலும், வினைத்திறன்மிக்கதும் சிறந்ததுமான அரச சேவையினை நிறுவும் பொருட்டு இணைந்த சேவை மற்றும் நாடளாவிய சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா.34/2023

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்,— பாடசாலை மாணவர்களை வாரத்தில் ஒரு நாள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்,— பல்வேறு விடயங்களின் காரணமாக பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமையினால் அவர்களது மன அழுத்தம் அதிகரித்துள்ளதாக சமூக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளமையினாலும், விளையாட்டு, சங்கீதம், சித்திரம், நடனம் போன்ற அழகியல் செயற்பாடுகள் மற்றும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை போன்ற விவசாய செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்களின் உள மற்றும் உடல் வளர்ச்சி ஏற்படுவதாக உளவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளமையினாலும், தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வாரத்தின் ஐந்து நாட்களில், வெள்ளிக்கிழமை போன்றதொரு தினத்தில் கட்டாய இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கான சூழமைவினை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் துரிதமாக வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா.35/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— அசுத்தமான உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளைத் தரப்படுத்துதல்,— சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற உணவக மற்றும் வெதுப்பக உற்பத்திகளின் தரம் மற்றும் தூய்மைத்தன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுவதனாலும், சில வெதுப்பக உற்பத்திகளின் அசுத்தம் காரணமாக நுகர்வோர் நோய்வாய்க்கு உட்படுவதற்கான அதிக வாய்ப்பு இருப்பதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கத் தலைவரே தெரிவித்திருப்பதனாலும், இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் தலையீட்டுடன் அசுத்தமான உணவகங்கள், வெதுப்பகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளை தரப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா.36/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— இணையவழி ஊடாக தருவிக்கப்படுகின்ற பொருட்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல்,— பாவனையாளர்கள் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை இணையவழி ஊடாக பெற்றுக்கொள்வதில் அதிகரித்த போக்கு இன்றளவில் உருவாகியுள்ளதனாலும், மேற்படி பொருட்களை நுகரும் போது பாவனையாளர்களுக்கு ஏற்படும் ஒவ்வாமைகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்காண்பதற்கான இயலுமை காணப்படாமையினாலும், இதன் காரணமாக சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் மற்றும் பிரிவினைகள் ஏற்படுவதன் மூலம் மோதல்கள் உருவாக பெரும்பாலும் வாய்ப்புள்ளதனாலும், இணையவழி ஊடாக தருவிக்கப்படுகின்ற பொருட்களை தரப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா.37/2023

கௌரவ ஜகத் சமரவிக்ரம,— இலங்கையில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் பணியாட்டொகுதியினரின் பங்கேற்புடன் பயிர்ச்செய்கை வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— எமது நாட்டில் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் பணியாட்டொகுதியினரின் பங்கேற்புடன் பழவகை, மரக்கறி மற்றும் கிழங்கு வகைகளை பயிரிடுவதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் என்பதனாலும், நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறைக்கு அது ஒரு தீர்வாக அமையும் என்பதனாலும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஆர்வம் கொண்டுள்ள அரச ஊழியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு கண்ணொருவ மற்றும் வேறு பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ள விவசாயப் பயிற்சி நிலையங்களின் ஊடாக விசேட பயிற்சியினை வழங்கி, நாடளாவிய ரீதியில் உணவுப் பயிர்கள் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல் மற்றும் மிகவும் வெற்றிகரமான பயிர்ச்செய்கைகளைத் தெரிவு செய்து தேசிய மட்டத்தில் பாராட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா.38/2023

கௌரவ ஜகத் சமரவிக்ரம,— கறவைப் பசு வளர்ப்பினை வனப்பூங்காக்களில் மேற்கொள்ளல்,— இலங்கையில் திரவப் பால் மற்றும் பால் மா நுகர்வானது அதிகமாக காணப்படுவதாலும், கறவைப் பசுக்களுக்கு அவசியமான புல்லைப் பெற்றுக்கொள்ள இயலாத காரணத்தால் பாற் பண்ணையாளர்கள் ஊக்கமிழந்துள்ளதாலும், உள்நாட்டு பாலுற்பத்தி போதுமானதாக இல்லையென்பதால் பால்மா இறக்குமதிக்கு பெருந்தொகை பணம் செலவு செய்யப்படுவதாலும், சட்டவிரோதமாக வனப்பூங்காக்களில் கறவைப் பசுக்களை பட்டி அடைப்பதால் பாற்பண்ணையாளர்கள் கைது செய்யப்படுவதாலும், உண்மையான பாற்பண்ணையாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கென அடையாள அட்டை வழங்கி கறவைப் பசு வளர்ப்பினை வனப்பூங்காக்களில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 39/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— முருங்கைச் செய்கையை விஸ்தரித்தல்,— முருங்கை மற்றும் முருங்கைசார் உற்பத்திகளுக்கு பல உலக நாடுகளிலும், உள்ளூர் சந்தையிலும் அதிக கேள்வி நிலவுவதாலும், கிராமிய மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு முருங்கைச் செய்கை பேருதவியாக அமையும் என்பதாலும், இலங்கைக்கு அதனூடாக அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான இயலுமை உள்ளதாலும், முருங்கைச் செய்கையை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 40/2023

கௌரவ டீ. வீரசிங்க,— விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் பழவகைகளை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தல்,— இலங்கைக்கு பழவகைகளை இறக்குமதி செய்வதற்காக அதிகளவு நிதி செலவிடப்படுவதாலும், நாட்டில் எங்கும் விளையும் மூவகைப் பழங்களான அன்னாசி, பப்பாளி மற்றும் வாழைப்பழம் என்பன தற்போது இறக்குமதி செய்யப்படுவதாலும், பெரியவர்கள் மற்றும் பிள்ளைகளின் விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் இம்மூவகைப் பழங்களை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 41/2023

கௌரவ டீ. வீரசிங்க,— உள்நாட்டு குரக்கன் உற்பத்தியை விஸ்தரித்தல்,— இலங்கையில் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்ட குரக்கன், பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான இயலுமையைக் கொண்டதென ஊட்டச்சத்து நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாலும், தற்போது அதிகளவான குரக்கன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதால் அதற்காக பெருமளவு அந்நியச் செலாவணி செலவு செய்யப்படுவதாலும், உள்நாட்டு குரக்கனின் புதிய வகையினங்களை அடையாளங்கண்டு அவற்றை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்தி உள்நாட்டுக் குரக்கன் உற்பத்தியை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 42/2023

கௌரவ டீ. வீரசிங்க,— பல்வேறு திறன்களைக்கொண்ட மூத்த பிரசைகளை தேசிய பொருளாதாரத்தில் பங்குகொள்ளச்செய்தல்,— மூத்த பிரசைகளில் பெரும்பாலானவர்கள் பல்வேறு தொழில்சார் திறன்களைக் கொண்டவர்களாக இருப்பதாலும், சூழல் நேயம் மிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் அறிவு அவர்களிடம் காணப்படுகின்ற போதிலும் அது தொடர்பில் முறையான கற்றாராய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும், தேசிய பொருளாதாரத்திற்கு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பங்களிப்பை முனைப்புடன் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையொன்று காணப்படாமையாலும், முதியோர் இல்லங்களில் அல்லது தங்களது வீடுகளில் தனிமையில் வாழ்ந்துவரும் மேற்படி மூத்த பிரசைகளை அவர்களது தொழில்சார் திறன்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்து அவ்வுற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப் படுத்துவதனூடாக அவர்களுக்கான வருமான வழியொன்றை ஏற்படுத்துவதற்கும் மன ஒருமைப்பாட்டை பேணிச் செல்வதற்கு உதவியாக அமைவதற்கும் பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

ப. 44/2023

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

ப. 45/2023

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 47/2023

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 48/2023

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 49/2023

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 50/2023

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 51/2023

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா. 52/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டல்,— இலங்கையிலுள்ள குடும்ப அலகுகளில் 25% ஆனவை பெண் தலைமைத்துவ குடும்பங்களாக உள்ளதனாலும், அவற்றில் 50% ஆனோர் விதவைகளாக உள்ளதனாலும், இக் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களில் பால்நிலை காரணமாக எழும் சிக்கல்கள், காணி உரித்து பற்றிய சிக்கல்கள், வாழ்வாதார வழிமுறைகள் மட்டுப்படுத்தப்படுதல் காரணமாக எதிர்கொள்ளும் சிக்கல்கள் பிரதானமானவையாக உள்ளதனாலும், ஏற்கனவே வாழ்வாதார தொழிலொன்றில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு போதியளவு பயிற்சி மற்றும் வசதிகள் இல்லாமை, சந்தைப்படுத்தலில் காணப்படுகின்ற சிக்கல்கள், காணிகளின் பின்னுரித்தினைச் சாட்டும்போது ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதன் காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் போன்ற பல சிக்கலான நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ளதனாலும் மேற்படி சிக்கல் நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு நிலைபேறான திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 53/2023

கௌரவ வேலு குமார்,— மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் "முல்லோயா கோவிந்தன்" என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 54/2023

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 58/2023

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,— தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சலுகை முறையில் வழங்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பருவச்சீட்டுக்களை மீண்டும் வழங்குதல்,— பெரும்பாலான தொழில்நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுள் அதிகமானோர் குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், ஒரு நாளைக்கு ஒரு தடவை பயணம் செய்வதற்கு ஒரு மாணவனுக்கு பெருந்தொகை பணம் செலவாகின்ற காரணத்தாலும், பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மாணவர்கள் பாடநெறிகளை பயில்வதற்காக வருகை தருவதாலும், மேற்படி மாணவர்களுக்கு 2022 ஆம் கல்வியாண்டு நிறைவுபெறும் வரையில் சலுகை முறையில் வழங்கப்பட்ட மாணவர் பருவச்சீட்டுக்கள் 2023 ஆம் கல்வியாண்டில் வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தாலும், மேற்படி இடைநிறுத்த அறிவிப்பை இரத்துச் செய்து சலுகை முறையில் வழங்கப்பட்ட மாணவர் பருவச்சீட்டுக்களை மீண்டும் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 59/2023

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— மனிதனுக்கு மிகவும் பயனுடைய இலுப்பை எண்ணையைத் தயாரித்தல்,— விவசாயத்திற்கும் மனிதனுக்கும் மிகவும் பயனுடைய இலுப்பை எண்ணையைத் தயாரிப்பதற்கு அவசியமான இலுப்பை மரங்களை அதிகரிக்கும் வகையில் வயல்வெளிகளில் இலுப்பை மரங்களை நடுவதற்கும், உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யக்கூடிய இலுப்பை எண்ணையின் பயன்பாடு தொடர்பில் மக்களை விழிப்பூட்டுவதற்கும், இலுப்பை எண்ணையின் தரம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விழிப்பூட்டுவதற்கும், இலுப்பை எண்ணையை ஏற்றுமதி செய்வதற்கும் துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 60/2023

கௌரவ லலித் வர்ண குமார,— டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக உயிரியல் கட்டுப்பாட்டு வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் டெங்கு நோயை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டவில்லை என்பதாலும், வருடாந்தம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாலும், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய விஞ்ஞான முறைகள் பின்பற்றப்படாவிடின் நுளம்புச் சுருள்களை உற்பத்தி செய்யும் கம்பெனிகள் பெருமளவில் தேவைப்படுவதையும், நுளம்புச் சுருள்களை விற்பனை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் காரணமாக மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதையும் தடுக்க முடியாது என்பதனாலும் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக தொடர்புடைய துறைகளையும் இணைத்துக்கொண்டு உயிரியல் கட்டுப்பாட்டு வேலைத்திட்டமொன்றினை அரசாங்கம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 61/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— மரகல சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்,— மொனராகலை நகரத்திலும் புறநகர் பகுதிகளிலும் வசிக்கும் 4000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மரகல மலைத் தொடரில் உள்ள நீர் மூலங்களிலிருந்தே குடிநீர் வழங்கப்படுவதாலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தேயிலை மற்றும் கோப்பிச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த இம்மலைத் தொடரில் தற்போது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும், இங்குள்ள லயன் குடியிருப்புகளில் அதிகளவான மக்கள் வசிப்பதாலும், இங்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காகவும், பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் காடுகளை வெட்டி துப்பரவுச் செய்வதும், காடுகளுக்கு தீ வைப்பதும் பாரிய சுற்றாடல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாலும், இவ்வாறு அழிவடைந்துவரும் சூழல் தொகுதியையும், நீர் மூலங்களையும் பாதுகாப்பதற்காக வர்த்தமான அறிவித்தல் மூலம் இப்பிரதேசம் சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ளதாலும், இப்பிரதேசத்தில் உள்ள காடுகள் வெட்டி துப்பரவுச் செய்யப்படுவதையும், வீடுகள் நிர்மாணிக்கப்படுவதையும் நிறுத்துவதற்கும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினருக்குப் பொருத்தமான பிரதேசங்களில் மாற்றுக் காணிகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 62/2023

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— சுதேச மருத்துவ நடவடிக்கைகளுக்காக மருத்துவச் சபையொன்றைத் தாபித்தல்,— உலகில் மிகச்சிறந்த கலாசாரத்தைக் கொண்ட இலங்கையின் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் பழமைவாய்ந்த வரலாறு முழுவதிலும் பல இலட்சக்கணக்கான மக்களைக் குணப்படுத்திய சுதேச பாரம்பரிய மருத்துவர்களினதும் சுதேச மருத்துவத்தினதும் எதிர்காலத்தை நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்காகப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்பதால், சுதேச மருத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இம்மருத்துவ முறையையும் மருத்துவர்களையும் பேணிப்பாதுகாத்து வளர்ப்பதற்காக சுதேச மருத்துவர்களைக் கொண்டமைந்த சுதேச மருத்துவச் சபையொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா. 63/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— பின்தங்கிய மற்றும் குறைந்த வசதிகளைக்கொண்ட பிரதேசங்களில் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்ற பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாத்தல்,— வடக்கு மற்றும் வன்னிப் பிரதேசங்களிலும் பின்தங்கிய பிரதேசங்களிலும் அழிவுற்ற நிலையுள்ள பான்சாலைகளையும் வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த வணக்கஸ்தலங்களையும் பாதுகாப்பதற்கும் குறித்த தலங்களை அரச நிதியைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா. 64/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— கைவிடப்பட்ட நிலையிலுள்ள புலம்பெயர் தொழிலாளர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருதல்,— இலங்கைக்கு அதிகளவான அந்நியச் செலாவணியை ஈட்டித் தருபவர்களாக புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளதாலும், போலியாக தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் மனித வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் செயற்பாடு காரணமாக தொழிலாளர்கள் பல மத்திய கிழக்கு நாடுகளில் நிர்க்கதியாகியுள்ளதாலும், அவர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்து வருவதற்கு துரிதமான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 65/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— ஆக்கிரமிப்புக் களைகளினால் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரியல் பல்வகைமைக்கும் விக்டோரியா உள்ளிட்ட நீர்த்தேக்கங்களுக்கும் ஆக்கிரமிப்புக் களைகளினால் பாரிய சேதம் ஏற்படுவதாலும், ஏற்கனவே, விக்டோரியா நீர்த்தேக்கத்தின் சில வலயங்களுக்கு அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாலும் இந்த ஆக்கிரமிப்புக் களைகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா. 66/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— உள்நாட்டு நெல்லினங்கள் பயிரிடப்படுவதை மேம்படுத்துதல் மற்றும் புதிய நெல்லினங்களை அறிமுகம் செய்தல்,— உள்நாட்டு நெல்லினங்கள் தொடர்பாக விவசாயிகளை விழிப்புணர்வூட்டி அவற்றை பயிரிடுவதற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குதல் மற்றும் உலகில் புதிதாக விருத்தி செய்யப்படுகின்ற அதிக விளைச்சலைத் தரும் நெல்லினங்களை இந்நாட்டுக்குத் தருவித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உள்நாட்டு விவசாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுத்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 67/2023

கௌரவ மயந்த திசாநாயக்க,— இளம் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக சலுகைக் கடன் திட்டமொன்றை ஏற்படுத்துதல்,— தொழிலின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு மத்தியிலிருந்து தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக வங்கிக் கட்டமைப்பின் ஊடாக சலுகை வட்டி வீதத்தின் கீழ் அவர்களுக்கு கடன் வசதிகளை வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 68/2023

கௌரவ ஹேஷா விதானகே,— மதத் தீவிரவாதத்தினை தடுப்பதன் அவசியம்,— எந்தவொரு நாட்டிலும் எந்தவொரு துறையிலும் தீவிரவாதக் கருத்துக்கள் காணப்படுவது மிகவும் பாதகமானது என்பதாலும், உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பின்னர் மதத் தீவிரவாதம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டிருப்பதாலும் மதத் தீவிரவாதம் உருவாவதையும் ஊக்குவிக்கப்படுவதையும் தடுப்பதற்கும் ஏற்கனவே அதற்கு இரையாகியுள்ள நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் துரித வேலைத்திட்டமொன்றை அசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 69/2023

கௌரவ ஹேஷா விதானகே,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 70/2023

கௌரவ ஹேஷா விதானகே,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 72/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் Z- புள்ளி (Z-Score) அடிப்படையில் அரசதுறை சார்ந்த சகல தொழில் வெற்றிடங்களையும் நிரப்புதல்,— அரச சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் போது முந்திய அரசாங்கங்களும் தற்போதைய அரசாங்கமும் அரசியல் பக்கச்சார்பு அல்லது விருப்பு வெறுப்பின் அடிப்படையில் பின்பற்றியுள்ள கொள்கைகள் அரச சேவையின் சுயாதீனத் தன்மைக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாலும், அதன் காரணமாக தீவிர அரசியல்மயப்படுத்தலுக்கு உட்பட்டுள்ள அரச சேவையை முழுமையாக சுயாதீனம் கொண்ட ஒன்றாக மாற்றவேண்டிய தேவை உள்ளதாலும், கல்வித் தகைமைகளின் அடிப்படையில் மாத்திரம் தொழில்களை வழங்கும்போது திறமையான மற்றும் தகைமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளுக்கு நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படுவதால் இளைஞர்களின் விரக்தியை அடியோடு ஒழிக்க அதன் மூலம் வாய்ப்புக் கிடைப்பதாலும், மாவட்டத்தில் ஏற்படும் வெற்றிடங்களுக்கான வாய்ப்பு சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு கிடைப்பதன் ஊடாக தொழில் பெறுநர்களின் பொருளாதார பாதுகாப்பு மற்றும் உயர் வினைத்திறன் கொண்ட சேவையை அரச துறைக்குப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதாலும், அனைத்து அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் மாகாண சபைகள், அனைத்து இணை நிறுவனங்களிலும் தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் Z-புள்ளியினை கவனத்தில் கொள்ள அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா. 73/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 74/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல், — இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு 2023 ஆம் ஆண்டளவில் பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று என்னால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

53.

பா. 75/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கையில் ஆகக்குறைந்தது 5% பிரதிநிதித்துவத்தை அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு வழங்குதல்,— இலங்கையில் இறுதியாக நடாத்தப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி நாட்டில் அங்கவீனர்களின் எண்ணிக்கையானது மொத்த சனத்தொகையில் 8%ஐ விஞ்சியுள்ளதாலும், கிராமிய நிருவாகம் இடம்பெறுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் முதல் தேசிய கொள்கைகள் உருவாக்கப்படும் பாராளுமன்றம் வரையிலான மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கு அங்கவீனர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகவே காணப்படுவதாலும், அங்கவீனமுற்ற இந்நாட்டு பிரஜைகளுக்கான கொள்கை உருவாக்கம் இடம்பெற்றிருப்பதும் இடம்பெறுவதும் வளர்ச்சியடைந்த நாடுகளின் கோட்பாடுகளுக்கு ஏற்பவல்ல என்பதாலும், அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்களைத் தயார் செய்கையில், ஆகக்குறைந்தது 5%மான பிரதிநிதித்துவம் அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு கிடைக்கும் வகையில் அரசாங்கம் உரிய சட்டங்களைத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

54.

பா. 76/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் அரசியலமைப்பை “பிரெயில்” எழுத்துமுறையிலும் “கேட்பொலி” (audio) வடிவத்திலும் தயார்செய்தல்,— அரசியலமைப்பானது எந்தவொரு நாட்டினதும் அடிப்படைச் சட்டமாகவும் அரசின் அடிப்படை மாதிரியாகவும் அமைந்திருப்பதாலும், சுமார் இருபத்திரண்டு மில்லியன்களான இலங்கைப் பிரசைகளில் சுமார் இரண்டு மில்லியன் பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளதாலும், மாற்றுத்திறனாளி களுக்கு மத்தியிலும் சுமார் ஆறு இலட்சம் பேர் செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற பிரசைகளாக உள்ளதாலும், நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய அறிவு மற்றும் புரிதலைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற மக்களுக்காக இலங்கையின் அரசியலமைப்பை “பிரெயில்” எழுத்துமுறையிலும் “கேட்பொலி” (audio) வடிவத்திலும் தயார் செய்வதற்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

55.

பா. 77/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய தகுதியின் அடிப்படையிலும் பாடசாலை அடிப்படையிலும் தலா 50% அமையும் வகையில் பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் சுட்டியாகிய Z புள்ளியை (Z-score) கணிப்பிடுதல்,— க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் கலைப் பீடம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக பீடங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் அடிப்படை மற்றும் சுட்டி Z புள்ளியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாலும், இந்த முறையியலுக்கு அமைவாக Z புள்ளியில் 40% தேசிய தகுதியின் (national merits) அடிப்படையிலும் 55% மாவட்ட அடிப்படையிலும் (district basis) 5% மிகவும் பின்தங்கிய மாவட்டங்களின் (remote districts) அடிப்படையிலும் அமையும் வகையில் கணிப்பீடு செய்யப்படுவதாலும், ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒரே சமனான புள்ளி மட்டத்தை அல்லது பெறுமானத்தை பிரதியீடு செய்தல் நீதியானதாகவும் நியாயமானதாகவும் அமையாததாலும், மாவட்ட மற்றும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் எனும் அடிப்படைக்குப் பதிலாக பாடசாலை அடிப்படையை பிரதியீடு செய்வதன் மூலம் பாடசாலை முறைமையில் உள்ள உயர்தர பிரிவுகளைக் கொண்ட மூவாயிரத்து நாற்பத்திரண்டு (3042) பாடசாலைகளை சில தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தி பல்கலைக்கழக அனுமதிக்கான தேசிய தகுதியின் கீழ் 50% மற்றும் பாடசாலை அடிப்படையின் கீழ் 50% என்றவாறு பல்கலைக்கழக அனுமதிக்கு Z புள்ளியை கணிப்பிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

56.

பா. 78/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுதல்,— இலங்கையின் சிங்கள சமூகத்தில் தனிநபர் பெயர்களை சூட்டுகின்ற சந்தர்ப்பங்களில் குடும்பப் பெயரானது பெரும்பாலும் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் காணப்பட்ட கடமைகளையும் மன்னர்களுக்கான பணியையும் பின்புலமாகக்கொண்டு அமைகின்ற காரணத்தினாலும், சில குடும்பப் பெயர்கள் மேற்படி கடமைகளுக்குரிய சாதியினை மேலெழுப்பும் வகையில் அமைந்துள்ளதாலும், நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது தேர்தல்களில் வாக்களிப்பதற்காக வாக்காளர்களின் பெயர்கள் அழைக்கப்படுகின்ற போது அல்லது பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களில் பட்டதாரிகள் அழைக்கப்படுகின்ற போது அல்லது தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கின்ற போது முதற்பெயருடன் குடும்பப் பெயரையும் சத்தமிட்டு அழைப்பதனால் பெரும்பாலானவர்கள் பாரிய அசௌகரியத்திற்கு ஆளாகின்ற காரணத்தினாலும், தற்போதைய சந்ததியினரால் நிராகரிக்கப்படுகின்ற நவீன உலகத்திற்குப் பொருந்தாத இச்சட்டத்தினை, வழக்கத்தினை அல்லது மரபினை நீக்கி மக்கள் முன்னிலையில் தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

57.

பா. 79/2023

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நில்வள கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தை துரிதமாக செயற்படுத்தல்,— 1980 ஆம் தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட நில்வள கங்கை அபிவிருத்தித் திட்டத்தை பூரணப்படுத்த முடியவில்லை என்பதால் மாத்தறை மாவட்டத்திலும் நில்வள பள்ளத்தாக்கிலும் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையும் பொருளாதாரமும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாலும், ஊறுபொக்கு ஓயா மற்றும் கிரம-ஆர என்பவற்றை அம்பாந்தோட்டை வறண்ட வலயத்திற்குத் திசைதிருப்புதல் மற்றும் கீழ் பள்ளத்தாக்கில் பட்டுவிட்ட நீர்த்தேக்கம், அத்துரலிய நீர்த்தேக்கம், கடவெத்துவ நீர்த்தேக்கம் மற்றும் தெதியகல நீர்த்தேக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களை அமைத்தல் மற்றும் பாதுகாப்பான வலயம் மற்றும் பாதுகாப்பற்ற வலயங்கள் தொடர்பில் மீளவும் கற்றாராய்ந்து கைவிடப்பட்ட அணைகளை (bunds) மீண்டும் நிர்மாணித்தல் என்பவற்றை முதலாகக் கொண்ட மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய நில்வள கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களை துரிதமாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

58.

பா.80/2023

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை வெளியிடுதல்,— மனித பரிணாம வளர்ச்சியிலிருந்து தொல்பொருளியல், இலக்கியம், நாட்டுப்புறவியல், உரோம, கிரேக்க மற்றும் பாரசீக வரலாறுகளை ஆய்வு செய்து இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் குழாத்தின் கீழ் அரச அனுசரணையுடன் வெளியிடுவதற்கு உகந்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

*59.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*60.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*61.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*62.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*63.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*64.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 01 ஆம் திகதிய 2334/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*65.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*66.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*67.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*68.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*69.

கடற்றொழில் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*70.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில்துறை கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2022.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*71.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2023.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.07.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

72.

இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

73.

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

74.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

75.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

76.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

77.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

78.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

79.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

80.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

81.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

82.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

83.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

84.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

85.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

86.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

87.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

88.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

89.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

90.
தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

91.
சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

92.
சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

93.
பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

94.
அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.